සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 09 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 62 T

சுட்டெண் ..........................................

# குடியியற் கல்வி

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **01 முதல் 05 வரையான வினாக்களுக்குரிய விடையினை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டினுள் எழுதுக.**

01. சகல பிரஜைகளும் அச்சமின்றி, சந்தேகமின்றி வாழ்வதற்கும் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்கும் சமூகத்திலிருந்து .................................................. கிடைக்கப்பெற வேண்டும்.
(அரவணைப்பும் பணமும்/ கல்வியும் பாதுகாப்பும்/ பாதுகாப்பும் அரவணைப்பும்)

02. அரச நிர்வாகம் தொடர்பான அடிப்படை சித்தாந்தங்களை உள்ளடக்கியது .................................................. ஆகும்.
(குற்றவியல் சட்டம்/ அரசியலமைப்புச் சட்டம்/ குடியியல் சட்டம்)

03. பெண்கள் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான சட்டம் .............................................. ஆகும்.
( அரசியலமைப்புச் சட்டம்/ குற்றவியல் சட்டம்/ சிவில் சட்டம்)

04. "தர்மத்துடன் இருப்பவன் தர்மத்தினாலேயே காக்கப்படுவான்" என்பது ............................................................ பிரிவின் மகுட வாசகமாகும்.
(நீதிமன்றம்/ இலங்கை பொலிஸ்/ பாடசாலை)

05. அரசாங்கத்தின் சட்டம் தொடர்பாக சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பது ................................ ஆகும்.
(சட்டமா அதிபர் திணைக்களம்/ நீதிமன்றம்/ பொலிஸ் திணைக்களம்)

- **06 முதல் 10 வரையுள்ள கூற்றுக்கள் சரியெனின் (✓) எனவும், பிழையெனின் (✗) எனவும் குறிக்க.**

06. சட்டமா அதிபர் நியமனம் செய்யப்படுவது ஜனாதிபதி அவர்களினால் ஆகும். (   )

07. இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது முப்படைகளின் பிரதான பணியாகும். (   )

08. நாட்டின் சட்டம் மற்றும் சமாதானத்தைப் பேணுவது நீதிமன்றம் ஆகும். (   )

09. இணக்கசபை மூலம் மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும். (   )

10. சிறுவர்களுக்காக நட்புள்ள, பாதுகாப்பான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நோக்கமாகும். (   )

- **11 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம்,
1. மனித உரிமைகள் ஆணைக்குழு  2. பொலீஸ்
3. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை  4. சட்டமா அதிபர் திணைக்களம்

12. மனிதன் தமது நடவடிக்கைகளை மிகவும் இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய வழிமுறை,
1. கல்வி  2. இயற்கை  3. தொழிநுட்பம்  4. இயந்திரங்கள்

13. விஞ்ஞானபூர்வ முறைகளைப் பின்பற்றி பிரச்சினையொன்று தொடர்பான தீர்வினைத் தேடுகின்ற செயன்முறை,
1. ஆய்வு  2. பரிசோதனை  3. உற்பத்தி  4. பரிசீலனை



kalvi.lk

14. நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியதும் வளங்களைப் பேணக்கூடியதுமான அபிவிருத்தி,
   1. வள அபிவிருத்தி
   2. பேண்தகு அபிவிருத்தி
   3. சுற்றாடல் அபிவிருத்தி
   4. பொருளாதார அபிவிருத்தி

15. சிறுவர் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களை தெரிவிப்பதற்கான தொலைபேசி இலக்கம்,
   1. 1919
   2. 1990
   3. 1929
   4. 1939

- **16 முதல் 20 வரையான வினாக்களுக்கு பகுதி "A" இல் தரப்பட்டுள்ளவற்றுக்குப் பொருத்தமானவற்றை பகுதி "B" இல் இருந்து தெரிவு செய்து இணைக்குக.**

| பகுதி "A" | பகுதி "B" |
|---|---|
| 16. பொலிஸ் | அரசு தொடர்பான வழக்குகளுக்கு ஆஜராகுதல். |
| 17. சிறைச்சாலை திணைக்களம் | பாதுகாப்பான முறையில் வாகனப் போக்குவரத்தை கட்டுப்படுத்தல். |
| 18. கடற்படை | நபர்களுக்கு புனர்வாழ்வளித்து நல்ல பிரஜைகளாக சமூகமயப்படுத்தல். |
| 19. இரசாயணப் பகுப்பாய்வுத் திணைக்களம் | தீவுகளுக்கிடையே போக்குவரத்து வசதிகளை வழங்குதல். |
| 20. சட்டமா அதிபர் திணைக்களம் | சட்டத்தை மதிக்கும் நேர்மையான சமூகமொன்றை கட்டியெழுப்புதல். |

(2x20=40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

* * * * *



kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**
- **முதலாவது வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய 4 வினாக்களுக்கு 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01. I. சமூகப் பாதுகாப்புக்காக குடும்பத்தினால் ஆற்றப்படும் பணிகள் 2 தருக.

ii. நாளாந்த வாழ்க்கையில் பிரஜைகளின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஏற்படுத்தப்பட்ட சமூக நிறுவனங்கள் 2 தருக.

iii. சட்டத்தின் மூலாதாரங்கள் 2னைக் குறிப்பிடுக.

iv. அரசாங்க இரசாயணப் பகுப்பாய்வாளர் திணைக்களத்துடன் இணைந்து செயற்படும் நிறுவனங்கள் 2 னைக் குறிப்பிடுக.

v. தொழிநுட்ப மாற்றங்கள் காரணமாக ஏற்படக்கூடிய சாதகமான விளைவுகள் ஒன்று வீதம் தருக.

vi. பல்வகையாக்கம் செய்யப்பட்ட தேயிலை உற்பத்திகள் 2 னைக் குறிப்பிடுக.

vii. பன்சல பிரிவெனாக்கள் உள்ளிட்ட சமய நிறுவனங்களில் அக்காலத்தில் எழுதுவதற்கு பயன்படுத்திய ஊடகங்கள் 2 தருக.

02. I. குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படும் சமூக விரோதச் செயல்கள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. சட்டத்தை அமுல்படுத்துவதற்கான பல்வேறு நிறுவனங்கள் மூன்றினைத் தருக. (3 புள்ளிகள்)

iii. (அ) இலங்கையில் பிரதான சட்ட அதிகாரி யார்?
(ஆ) இவர் யாரால் நியமனம் செய்வார்?
(இ) சட்டத்தின் பண்புகள் 3 குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

03. I.



A


A எனும் எழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலட்சினைக்குரிய நிறுவனம் யாது? (3 புள்ளிகள்)

ii. இந்நிறுவனத்தின் மூலம் ஆற்றப்படும் சேவைகள் 2 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. (அ) இலங்கையில் தற்பொழுது காணப்படும் அதிக அதிகாரங்கள் கொண்ட நீதிமன்றங்கள் 2 தருக?
(ஆ) நீதிமன்றம் தொடர்பான பொறுப்புக்கள் 2 தருக. (5 புள்ளிகள்)

04. I. தொழிநுட்பம் எனப்படுவது யாது? (2 புள்ளிகள்)

ii. தொழிநுட்ப மாற்றம் காரணமாக வீடுகள், பின்வருமாறு மாற்றமுற்றிருப்பதனை உரு காட்டுகின்றன. இவற்றை இனங்கண்டு பெயரிடுக.




(5 புள்ளிகள்)

iii. (அ) தொழிநுட்ப மாற்றத்தின் மூலம் மனித வாழ்க்கைக்கு ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகள் 4 தருக. (2 புள்ளிகள்)
(ஆ) தற்காலத்தில் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 2 எழுதுக. (2 புள்ளிகள்)



kalvi.lk

05. I. எந்தவொரு நாட்டினதும் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய பிரதான செயற்பாடுகள் மூன்றும் எவை? (3 புள்ளிகள்)

ii. கைத்தொழில் துறையில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் காரணமாக பொருளாதாரத் துறையில் காணக்கூடிய மாற்றங்கள் 3 எழுதுக. (3 புள்ளிகள்)


iii. (அ) பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள நவீன தொழிநுட்பத்துடன் கூடிய உபகரணங்கள் எத்துறையோடு தொடர்புடையது?

(ஆ) பின்வரும் உருவிலுள்ளவற்றை இனங்கண்டு அதற்குரிய சரியான பெயர்களை எழுதுக.


A


B


C


D

(5 புள்ளிகள்)

06. I. சகவாழ்வு என்பதால் கருதப்படுவது யாது? (3 புள்ளிகள்)

ii. இன்று சகவாழ்வின் அவசியத்தை உணர்த்தக்கூடிய உதாரணங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

iii. (அ) சகவாழ்வின் பண்புகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் முக்கித்துவங்கள் 3 குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

07. i.


A


(அ) இவ்விலச்சினை எந்த இயக்கத்திற்குரியது?

(ஆ) இவ்வியக்கத்தின் தந்தை யார்?

(இ) இவ்வியக்கத்தின் தொனிப்பொருள் யாது?

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் குறுக்கெழுத்துச் சட்டகத்தைப் பூர்த்தி செய்க.






kalvi.lk

இடமிருந்து வலம்:-

1. சகல பிரஜைகளுக்கும் அச்சமின்றி வாழ்வதற்கு சமூகத்திலிருந்து பாதுகாக்கும் அரவணைப்பும் கிடைப்பதை இவ்வாறு அழைக்கலாம்.
2. கடமைகளைச் செய்வதினூடாக இதனைப் பெறலாம்.
3. சமூக நிறுவனங்களில் ஒன்று
4. அபிவிருத்தியடைந்த நாடுகளில் விவசாயத்திற்கு இதனைப் பயன்படுத்த விமானங்களைப் பயன்படுத்துவர்.

மேலிருந்து கீழ் :-

5. தனியாட்களின் கூட்டுச் சேர்க்கை
6. ஒரு நாட்டின் மிக உயர்ந்த சட்டம் இதுவாகும்.
7. இரசாயணப் பகுப்பாய்வாளர் திணைக்களத்துடன் இணைந்த திணைக்களம் ஒன்று
8. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பிரதான செயற்பாடுகளில் ஒன்று

(8 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457